திி /திி /புனித மரியாள் கல்லூரி (தேசிய பாடசாலை) – திருகோணமலை
மூன்றாந்தவணைப் பரீட்சை -2022 (2021)
தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம் -08 நேரம் - 2.30மணித்தியாலம்
சுட்டெண் :- ..............................

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **பின்வரும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையினை தெரிவு செய்து கோடிடுக.**

1. ‘‘உங்களைவ வாழ்க்கைக்கு உயிர் நாடி என்று உலகம் போற்றுகின்றது’’இங்கு ‘‘உலகம்’’ என்பதன் ஒத்த கருத்துச் சொல்
   1.விருப்பு 2.ஞானம் 3.ஆன்மா 4.வையகம்
2. அழுகிப் போய்விடுவோம் என்ற பயம் எங்களுக்கு இருக்கின்றது.இங்கு ‘‘பயம்’’ என்பதன் கருத்து.
   1.ஐயம் 2.துணிவு 3.பாசம் 4.ஏமாற்றம்
3. ‘‘நாட்டுப் பயிரை நஷ்ட்டப்படுத்துகின்றாய்’’ இங்கு நஷ்டம் என்பதன் எதிர்க்கருத்து
   1.குறைவு 2.ஏமாற்றம் 3.இலாபம் 4.நட்டமடைதல்
4. ‘‘ஈதல் பெரிது ஈதல் சிறந்தது’’ இங்கு ‘‘ஈதல்’’ என்பதன் எதிர்கருத்து
   1.கொடை 2.ஏற்றம் 3.வள்ளல் 4.ஏற்றல்
5. ‘‘வாலிபர்களைக் கண்ட மக்கள் பயம் தெளிந்தனர்’’வாலிபன் என்பதன் எதிர்ப்பாற் சொல்
   1.வாலை 2.வாளை 3.வாலிபை 4.யுவதி
6. பலா - மூசு என்பது போல பனை-..........
   1.நுங்கு 2.வடலி 3.கன்று 4.பழம்
7. இக்காலத்தில் பொருட்களின் விலை....................... செல்கின்றது.
   1.விரைந்து விரைந்து 2.ஏறிஏறி 3.அடுத்தடுத்து 4.நீண்ட நீண்ட
8. சகுந்தலை எண்ணற்ற மகிழ்சியோடு அழகுக்கு அழகு சேர்ப்பது போல அணிகலண்களை அணிந்து வந்தாள். இங்கு வெளிப்படும் கருத்தோடு தொடர்புடைய உவமைத்தொடரை இனங்காண்க.
   1.அத்திபூத்தாற்போல 2.பொன்னின் குடத்திற்கு பொட்டிட்டது போல
   3.ஒளியைக் கண்ட இருள் போல 4.பசுமரதத்ததாணி போல
9. ‘‘தீவிரமாக முனைந்து நிற்றல’’ எனும் பொருள் தரும் மரபுத்தொடர்
   1.குதிகைக்கொம்பு 2.அக்கரைபச்சை 3.கங்கணங்கட்டுதல் 4.ஒத்துப்பாடுதல்
10. ‘‘பாரதி இனிழமயான பாடல்களைப் பாடினார். இங்கு இனிமையான என்பது
    1.எழுவாய் 2.வினையடை 3.பெயரடை 4.பயனிலை
11. பாரதியின் பாட்டுக்களும் புகழும் ஊரெங்கும் பரவின.இங்கு இடம்பெற்ற எழுவாய்
    1.பாட்டுக்களும் புகழும் 2.ஊரெங்கும் 3.பரவின 4.பாரதியின்
12. ‘‘குணதிசை அழகுராணியாம்......’’ இங்கு குணதிசை என்பது.
    1.வடக்கு 2.மேற்கு 3.கிழக்கு 4.தெற்கு
13. ‘‘கோபத்தீ’’ என்பது எவ்வகை அணி
    1.உவமை 2.சிலேடை 3.உவமானம் 4.உருவகம்
14. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவியாக அமைவது
    1.ஓடுஓடு 2.பாடிப்பாடி 3.படபட 4.சின்னஞ்சிறிய
15. நீரின்றி அமையாது எலகு எனும் கட்டுரையின் ஆசிரியர் யார்?
    1.பேராசிரியர் 2.வா.செ.குழந்தைசாமி 3.வ.மு.வரதராசன் 4.கவிமணி
16. ‘‘மண்ணும் வானும் தவிர நான் பார்கவும் படிக்கவும் எனக்கு நூல்கள் இல்லை’’ எனும் கூற்றினைக் கூறியவர்.
    1.பாலிசி 2.லியானாடோ டாவின்சி 3.பிளேட்டோ 4.அரிஷ்டோட்டில்
17. பின்வருவனவற்றில் யகர மெய் உடம்படு மெய்யாக தோன்றும் சொல்
    1.பலாவிலை 2.பாற்சோறு 3.மணியோசை 4.மாநிலம்
18. பாலாடை என்பது
    1.திரிதல் 2.இயல்பு 3.விகாரம் 4.கெடுதல்
19. பின்வருவனவற்றில் கன்னடமொழிச்சொல்லாக அமைவது
    1.இடாப்பு 2.இராணுவம் 3.சந்தடி 4.அக்கறை
20. ‘‘வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்’’ இக்கூற்றினை் கூறியவர்.
    1.வள்ளலார் 2.தொல்காப்பியர் 3.சோழன் 4.பேகன் (40புள்ளிகள் )

## பகுதி- 11

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

**1) பின்வரும் தலைப்புக்களில் என்றினை தெரிவு செய்து 150 சொற்களுக்கு குறையாமல் எழுதுக.**

1.மலையகத் தோட்டம்
2.அடக்கம் மலைஓத்த உயர்வு தரும்
3.தமிழரின் அறிவுப்பாரம்பரியம்
4.தமிழின் சிறப்பு (20புள்ளிகள் )

**2) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவு செய்து 75 சொற்களில் எழுதுக.**

மனித வாழ்க்கைக்கு போசாக்குள்ள நிறையுணவு அவசியமானதாகும் எனவே வெளியூரில் வேலை செய்யும் உங்களது அப்பாவிற்கு நிறையுணவின் தேவையினை எடுத்துக் கூறி கடிதம் எழுதுக.

அல்லது

அண்மையில் பாடசாலை நடைபெறவிருக்கும் நூற்றாண்டு விழாவிற்கான வரவேற்புரை ஒன்றினை நிகழ்வுப் பொறுப்பாளராக உம்மைக் கருத்திற் கொண்டு எழுதுக.

(15புள்ளிகள் )

3) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.
1.மழை ஒன்றே நீருக்கு தோற்றுவாய் எனக் கருத்துவெளியிட் அறிஞர்கள் யாவர்?
2.அறிக்கைஎழுதும் படிமுறைகளை ஒழுக்குமுறையில் தருக?
3.நாட்டார் பாடல்களின் கருப்பொருளாக அமையும் விடயங்கள் எவை?
4.பெருந்தலைச்சாத்தானாரின் வறுமைநிலைபற்றிக் குறிப்பிடுக?
5.எலிகள் செய்யும் கோட்டிகளைப் பட்டியற்படுத்துக.

**(25புள்ளிகள் )**